அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இல : 23/2001

எனது இல : தா/111/3/4
அரசாங்க நிர்வாக, உள்நாட்டலுவல்கள்,
மாகாண சபைகள்,உள்ளூராட்சி மற்றும்
தென்பகுதி அபிவிருத்தி அமைச்சு
சுதந்திர சதுக்கம், கொழும்பு.07
2001.12.03

அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும்,
மாகாண சபைகளின் பிரதான செயலாளர்களுக்கும்,
திணைக்களத் தலைவர்களுக்கும்.

## அரச உத்தியோகத்தர்களுக்கான விசேட முற்பணம்-வருடம் 2002

பின்வரும் உத்தியோகத்தர்களுக்கு 2002 ஆம் ஆண்டில் 1000/- ரூபாவுக்கு மேற்படாத விசேட முற்பணமொன்றைக் கொடுப்பதென முடிவு செய்யப்பட்டுள்ளது.

(அ) எல்லா நிர்நதர அரசாங்க உத்தியோகத்தர்களுக்கும்

(ஆ) முற்பணம் வழங்கப்படும் திகதிக்கு உடனடுத்து முன்பாக 3 மாதங்களுக்குக் குறையாதவாறு தொடர்ச்சியான சேவையை உடையவரும் கடன் திருப்பிப் பெறப்படும் முழுக்காலப்பகுதி (உ-ம் : குறைந்தது 2002 டிசம்பர் இறுதி வரையில்) தொடர்ந்து சேவையில் ஈடுபடுத்துவதற்கு உறுதியுடையவர்களுமான தற்காலிக அல்லது அமைய அடிப்படையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்களுக்கும்

02. இம் முற்பணம் அமய, தற்காலிகப் பணியாளர்களுக்குக் கொடுப்பனவு செய்வதாயின் நிரந்தர அரச பணியாளர் ஒருவர் பிணையாளியாக பிணை முறியொன்றை கையொப்பமிடுதல் வேண்டும்.

03. 1977 முதல் 2001 ஆம் ஆண்டு வரை தாம் பெற்ற ஏதும் விசேட வங்கிக் கடன்கள் தொடர்பில் தவணைப் பணங்களைச் செலுத்தத் தவறிய ஓர் அரசாங்க உத்தியோகத்தர் 2002 ஆம் ஆண்டுக்கான இவ்விசேட முற்பணத்தைப் பெறத் தகுதியுடையவராகார்.

04. இம் முற்பணம் 01.01.2002 ஆந் திகதிக்கும் 28.02.2002 ஆம் திகதிக்கும் இடைப்பட்ட காலத்தில் கொடுத்து முடிக்கப்படுதல் வேண்டும். 28.02.2002 ஆம் திகதிக்குப் பின்னர் எவ்விதக் கொடுப்பனவும் செய்யப்படுதலாகாது.

05. இம் முற்பணம் ''அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு முற்பணக்கணக்கு -பி'' என்பதில் பற்று வைக்கப்படுதல் வேண்டும்.

06. இம் முற்பணம் ஆண்டொன்றுக்கு 8% சதவீதப்படி சமனாக்கிய மாதாந்த வட்டியுடன் சேர்த்து சமமாக அறவிடப்படுதல் வேண்டும். 1000/-ரூபா முற்பணத்திற்குரிய சமனாக்கிய மாதாந்த வட்டி 3 ரூபா 67 சதம் என நிர்ணயிக்கப் பெற்றுள்ளது. 1000/- ரூபாவுக்குக் குறைந்த முற்பணங்களின் தொடர்பில் விகிதாசாரப்படியான சமனாக்கிய மாதாந்த வட்டி அறவிடப்படுதல் வேண்டும்.

07. 238 ஆம் நிதி ஒழுங்கு விதி தாபனக் கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 3 ஆம் பிரிவு என்பனவற்றில் குறித்துரைக்கப்பட்டுள்ள 40 சதவீத அல்லது 33 1/3 % சதவீத எல்லையிலிருந்து முற்பணம் பேரிற் செய்யப்படும் அறிவீடுகளுக்கு விலக்களிக்கப் பெற்றுள்ளது.

08. அறவிடப்படும் அடிப்படை தொகையின் பங்கை இந்த முற்பணம் வழங்கப்படும் ''அரச உத்தியோகத்தர்களின் முற்பணம் ''பி'' கணக்கில் வரவு வைத்தல் வேண்டும். அறவிடப்படும் வட்டியை அரசிறைக் கணக்கில் குறியீடு இல.05022 (வட்டி-ஏனைய) வரவு வைக்கப்பட வேண்டும். அறவிடுதல்கள் 2002.12.31 ஆந் திகதி முடிவடைய வேண்டும்.

09. ''அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு முற்பணக் கணக்கு'' என்பதிலிருந்து கொள்ளற்பாலதாகிய விழா முற்பணங்களோடு அல்லது ஏனைய முற்பணங்களோடு அல்லது 1977 ஆம் 1978 ஆம் 1979 ஆம் ஆண்டுகளிற் வழங்கப்பெற்ற விசேட வங்கிக் கடன்களோடு இவ் அறவிடுதல்களைக் கலத்தலாகாது.

10. கொடுப்பனவையும் மற்றும் முதல்சார் தவணைக் கட்டணங்கள் சமமாக்கிய மாதாந்த வட்டி என்பவற்றின் அறவீட்டையும் பதிவதற்கு படிவம் சிசி 10 என்பதிலான புறம்பான பதிவேடோன்றை வைக்கப்படுதல் வேண்டும்.

11. முற்பணக் கணக்கு எல்லைகளில் திருத்தங்கள் மேற்கொள்ள ஏற்படுமிடத்து திணைக்களத் தலைவர்களால் நி.பி.503 மற்றும் 1987.09.11 கொண்ட அரச முயற்சிகள் பிரிவின் சுற்றுநிருபக் கடிதம் இல.43 இன்படி செயல்பட வேண்டும்.

12. இடமாற்றஞ் செய்யப்படும் அரசாங்க உத்தியோகத்தர் ஒருவர் சம்பந்தமாக முற்பணக் கணக்கிலிருந்து கொடுக்கப்படும் முற்பணங்களின் அறவிடுதல்கள் தொடர்பில் வழமையாகப் பின்பற்றப்படும் நடைமுறை கடைபிடிக்கப்படுதல் வேண்டும். அதாவது குறித்த முற்பணத்தின் நிலுவை மீதியை அவ்வுத்தியோகத்தரை விடுவிக்குந் திணைக்களத்திற்கு அவ்வுத்தியோகத்தர் மாற்றப்பட்டுள்ள திணைக்களம் அதன் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு முற்பணக் கணக்கு ''பீ'' என்பதிற் பற்று வைப்பதன் மூலம் கொடுத்தல் வேண்டும். அதன் பின் தவணைக் கட்டணங்களின் அறவிடுதல்களை தொடர்ந்து செய்யப்படுவதுடன் எச் சந்தர்ப்பத்திலும் 2002 டிசம்பர் மாத இறுதியளவில் அறவிடுதல் செய்து முடிக்கப்படுகின்றனவென்பதை உறுதிப்படுதுதலும் வேண்டும்.

13. இத்திட்டத்தின் கீழ் முற்பணமொன்றைப் பெற்ற பணியாளரொருவர் பணியில்லாது போகுமிடத்து அத்தகைய பணியாளரிடமிருந்து வருமதியாகவிருக்கின்ற (சமனாக்கிய வட்டியுட்பட) நிலுவையாகவுள்ள முற்பண மீதி அவரின் ஓய்வூதிய/ஏற்பாட்டு நிதியம்/ஏமப்பணம்/பணிக்கொடை அல்லது அவருக்குக் கொடுக்கற்பாலதான வேறேதேனும் பணத்திலிருந்து அறவிடப்படுகின்றதென்பதையும், அவர் ஒரு தற்காலிகப் பணியாளராயின் அவரின் கடைசி மாதச் சம்பளத்திலிருந்து அறவிடப்படுகின்றதென்பதையும் சம்பளத் தாபன கூறுகளில் உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.

14. இந்த முற்பணமானது 03.06.1985 ஆம் திகதியையும் 293 ஆம் இலக்கத்தையும் கொண்ட அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கையின் பிரகாரம் வழங்கப்பட்ட முற்பணத்துக்கு /கடன்களுக்கு மேலதிகமாக வழங்கப்படுகின்றது.

15. 25.09.1984 ஆம் திகதியையும் 268 ஆம் இலக்கத்தையும் கொண்ட அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கையுடன் இணைக்கப்பட்டிருந்த மாதிரி விண்ணப்பப் படிவத்தைத் தேவைக்கேற்பத் திருத்துவதன் மூலம் இந்த முற்பணத்துக்கான விண்ணப்பப் படிவங்களை வழங்கும் அதிகாரி தயாரித்தல் வேண்டும்.

16. இவ்விசேட முற்பணக் கொடுப்பனவு காரணமான 2002 ஆம் ஆண்டில் விசேட வங்கி முற்பணம் கொடுக்கப்படமாட்டாது.

17. இந்தச் சுற்றறிக்கையில் அடங்கியுள்ள விடயங்களை உங்கள் திணைக்களத்திலுள்ள தகுதி வாய்ந்த எல்லா உத்தியோகத்தர்களுக்கும் அறியத் தருக.

18. இந்தச் சுற்றறிக்கையானது பொதுத் திறைசேரியின் சம்மதத்துடன் வெளியிடப்படுகின்றது.

ஒப்பம் : எம்.என்.ஜுனைட்
அரசாங்க நிர்வாக,உள்நாட்டலுவல்கள்
மாகாண சபைகள்,உள்ளூராட்சி மற்றும்
தென்பகுதி அபிவிருத்தி அமைச்சு